# நமது தினகனி

காலை நாளிதழ்

NAMADHU DHINA KANI Daily Morning

Vol: 01 | Issue: 291 | 4 Pages | 25.5.2024 | Friday | Price Rs. 6 | Annual Subscription Rs: 1825 | Tiruppur

மலர்: 01 | இதழ்: 291 | 4 பக்கங்கள் | 25.5.2024 | சனிக்கிழமை | விலை ரூ.6 | வருட சந்தா ரூ.1825 | திருப்பூர்


## போலி ஆவணங்கள் மூலம் பெறப்பட்ட 6.80 லட்சம் செல்போன் இணைப்புகளை துண்டிக்க நடவடிக்கை

புதுடெல்லி, மே. 25

செல்போன் அழைப்புகள் மூலம் ஆன்லைன் மோசடிகள் மற்றும் இணையதள குற்றங்கள் நடப்பது அதிகரித்துள்ளது.

இந்நிலையில், போலி ஆவணங்கள் மூலம் பெறப்பட்ட செல்போன் இணைப்புகள் குறித்து தொலைத்தொடர்புத்துறை ஆய்வு நடத்தியது. செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத்தை பயன்படுத்தி நடத்தப்பட்ட ஆய்வில், 6 லட்சத்து 80 ஆயிரம் செல்போன் இணைப்புகள் மோசடியாக பெறப்பட்டு இருக்கலாம் என்று சந்தேகம் எழுந்துள்ளது.

அதாவது, போலியான அடையாள ஆவணங்கள், முகவரி ஆவணங்கள், சுயவிவர ஆவணங்களை பயன்படுத்தி, இந்த செல்போன் எண்கள் பெறப்பட்டுள்ளதாக தெரிகிறது. அதனால், அந்த செல்போன் இணைப்புகளை 60 நாட்களுக்குள் சரிபார்க்கும் பணியில் ஈடுபடுமாறு தொலைத்தொடர்பு நிறுவனங்களை தொலைத்தொடர்புத்துறை கேட்டுக்கொண்டுள்ளது.

அப்படி சரிபார்ப்பு நடவடிக்கையில் ஈடுபடாவிட்டால், அந்த செல்போன் இணைப்புகள் துண்டிக்கப்படும் என்று கூறியுள்ளது.

..........................................

## பிறந்த நாள் விழா போர்வையில் போதை பார்ட்டி: நடிகை உள்பட 86 பேர் பிடிபட்டனர்

பெங்களூரு, மே.25

பெங்களூருவில் உள்ள ஒரு பண்ணை வீட்டில் பார்ட்டி நடைபெறுவதாக போலீசாருக்கு தகவல் வந்தது. போலீசார் அந்த இடத்திற்கு சென்று சோதனையிட்டனர். அப்போது இந்த பார்ட்டியில் ஏராளமான பிரபலங்கள் ஈடுபட்டதை கண்டு போலீசார் அதிர்ச்சி அடைந்தனர்.



போதையில்இருந்து அனைவரும் போதை பொருட்கள் பயன்படுத்தினார்களா? என்பது அறிய பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டனர். அப்போது தெலுங்கு நடிகை ஹேமா உள்ளிட 86 பேர் போதைப்பொருள் உட்கொண்டது தெரியவந்தது.

இந்த பார்ட்டியில் 73 ஆண்கள், 30 பெண்கள் கலந்து கொண்டதாக எஃப்.ஐ.ஆர். மூலம் தெரியவந்துள்ளது. ரத்தப் பரிசோதனையில் 59 ஆண்களுக்கும், 27 பெண்களுக்கும் பாசிட்டிவ் ரிசல்ட் வந்துள்ளது.

பாசிட்டிவ் ரிசல்ட் வந்தவர்களுக்கு மத்திய கிரைம் பிராஞ்ச் நோட்டீஸ் அனுப்ப உள்ளது. மேலும், சம்மன் அனுப்பி விசாரணைக்கு ஆஜராகும்படி உத்தரவிடவும் முடிவு செய்துள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

போலீசார் பார்ட்டி நடந்த இடத்தில் இருந்து 14.40 கிராம் எம்.டி.எம்.ஏ. மாத்திரிகைள், 1.16 கிராம் எம்டிஎம்ஏ கிரிஸ்டல்ஸ், ஆறு கிராம் ஹைட்ரோ கஞ்சா, ஐந்து கிராம் கோகைன், கோகைன் பூசப்பட்ட 500 நோட்டுகள் ஆகியவற்றை போலீசார் கைப்பற்றியுள்ளனர்.

பிறந்தநாள் விழா பார்ட்டி என்ற போர்வையில் அதிகாலை 2 மணியையும் தாண்டி நடைபெற்றதால் போலீசார் அதிரடி நடவடிக்கையில் இறங்கியுள்ளனர்.

பெங்களூரு போலீசாரால் விசாரணைக்கு அழைத்துச் செல்லப்பட்டவர்கள் தெலுங்கு நடிகை ஆஷி ராயும் ஒருவர். ஆனால் இந்த பார்ட்டியின் உண்மையான நோக்கத்தை தான் அறிந்திருக்கவில்லை. பார்ட்டில் கலந்து கொண்டேன். ஆனால் உள்ளே என்ன நடந்தது என்பது தெரியாது எனத் தெரிவித்துள்ளார்.

பண்ணை வீடு கோபால ரெட்டி என்பவருக்கு சொந்தமானது என்றும், ஐதராபாத்தைச் சேர்ந்த வாசு என்பர் பார்ட்டிக்கு ஏற்பாடு செய்ததாகவும் கூறப்படுகிறது.

..........................................

## போஸ்கோ குற்றவாளிக்கு 'நல்ல குடும்ப பின்னணி' உள்ளது எனக்கூறி ஜாமின் வழங்கிய உயர்நீதிமன்றம்

மத்தியப்பிரதேசம், மே. 25

மத்தியப்பிரதேசத்தில் மைனர் பெண்ணை வாட்சப் வழியாகவும் மொபைல் போன் வழியாகவும் ஆபாசமாக பேசி துன்புறுத்தியதாக கூறி ஏப்ரல் 4 ஆம் தேதி போக்சோவின் கீழ் கல்லூரி மாணவர் கைது செய்யப்பட்டார்.

இந்நிலையில், இளைஞரின் குடும்பம் நல்ல குடும்ப பின்னணியில் இருந்து வருகிறது என்பதை காரணமாக காட்டி கைது செய்யப்பட்ட இளைஞருக்கு மத்தியப் பிரதேச உயர் நீதிமன்றம் நிபந்தனை ஜாமின் வழங்கியுள்ளது சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.

இளைஞரின் ஜாமின் மனுவை மே 16 அன்று நீதிபதி ஆனந்த் பதக் இந்த வழக்கை விசாரித்தார். அப்போது குற்றம் சாட்டப்பட்டவரின் பெற்றோர் நீதிமன்றத்தில் ஆஜராகி, தங்கள் மகன் செய்ததை நினைத்து வெட்கப்படுகிறோம் என்றும் அதே நேரத்தில் இதுபோன்ற செயல்களை மீண்டும் செய்ய மாட்டான் என்று நீதிமன்றத்தில் உறுதியளித்தனர்

மனுதாரர் தரப்பில் ஆஜரான வழக்கறிஞர், "சிறைத்தண்டனை விதித்தால் மாணவரின் கல்லூரி வாழ்க்கை பாதிக்கும் எனவும் எதிர்காலத்தில் இது போன்ற செயல்களில் ஈடுபடாமல் ஒரு நல்ல மனிதனாக மாறுவதற்கான முயற்சிகளை அவர் மேற்கொள்வார் என்றும் இனிமேல் எந்த விதத்திலும் அந்த மைனர் பெண்ணுக்கு அவர் எந்த சங்கடத்தையும் அல்லது துன்புறுத்தலையும் ஏற்படுத்த மாட்டார்" என்று உத்தரவாதம் அளித்தார்.

ஆனால் அரசு தரப்பு இளைஞருக்கான ஜாமீனை எதிர்த்தது. குற்றம் சாட்டப்பட்டவர் வாட்ஸ்அப் மூலமாகவும் , மொபைல் போன் மூலமாகவும் பாதிக்கப்பட்டவரை எந்த நேரத்திலும் அழைத்து துன்புறுத்தியுள்ளார் என்று கூறி பாதிக்கப்பட்ட பெண் தரப்பில் ஜாமினுக்கு எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டது.

இரு தரப்பு வாதங்களையும் கேட்ட நீதிபதி, போக்சோ வழக்கில் இளைஞர் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகள் கேவலமானது என்றும் அதே சமயம் குற்றம் சாட்டப்பட்டவர் தன்னை திருத்தி கொள்ள ஒரு வாய்ப்பு கொடுக்கப்படவேண்டும், ஆகவே போபால் மருத்துவமனையில் 2 மாதங்கள் சேவை செய்ய வேண்டும் என்ற நிபந்தனையுடன் அவருக்கு ஜாமின் வழங்கினார்.

ஒவ்வொரு சனி மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளிலும் காலை 9 மணி முதல் மதியம் 1 மணி வரை போபால் மாவட்ட மருத்துவமனையில் நோயாளிகள் மற்றும் மருத்துவமனை ஊழியர்களுக்கு அவர் உதவி செய்ய வேண்டும் என்று நீதிபதி உத்தரவிட்டார்.

# பாதுகாப்புடன் வாழ்வதால் முதலமைச்சரை மனதார பாராட்டும் பெண்கள் தமிழ்நாடு அரசு

சென்னை, மே.25

தமிழக அரசு வெளியிட்டுள்ள செய்தி குறிப்பில் கூறப்பட்டு இருப்பதாவது:

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தமிழ்நாட்டில் வாழும் மகளிர், மாற்றுத்திறனாளிகள், திருநங்கையர், குழந்தைகள் ஆகியோரின் பாதுகாப்பிலும் வளர்ச்சியிலும் தனிக் கவனம் செலுத்தி சமூகநலத்துறையில் பல சிறப்புத் திட்டங்களை முனைப்போடு செயல்படுத்தி வருகிறார்.

ஆட்சி பொறுப்பேற்ற சமயத்தில் கொரோனா நோய்த் தொற்றினால் பாதிக்கப்பட்டு பெற்றோர் இருவரையும் இழந்த, தாய் அல்லது தந்தையை இழந்த 382 குழந்தைகளின் பெயரில் தலா ரூ.5 லட்சம் வீதம் ரூ.19.10 கோடி; வங்கிகளில் வைப்பீடு செய்து குழந்தைகள் 18 வயதை நிறைவு செய்யும்போது அவர்களுக்கு வட்டியுடன் வழங்கும் திட்டத்தை உருவாக்கியதால் தாயுமானவராகப் போற்றப்படுகிறார்.

மேலும், கொரோனா நோய்த் தொற்றினால் பாதிக்கப்பட்டு தாய் அல்லது தந்தையை இழந்த 18 வயதுக்குட்பட்ட 13,682 குழந்தைகளின் பெற்றோர்களுக்கு தலா ரூ.3 லட்சம் வீதம் 410.46 கோடி ரூபாயையும் மற்றும் இலங்கைத் தமிழ் அகதிகளின் 9 குழந்தைகளுக்கு தலா ரூ.3.லட்சம் வீதம் ரூ.27 லட்சம் ரூபாயையும் கூடுதலாக ரூ.437.46 கோடி நிவாரணத் தொகை வழங்கினார்.

கொரோனா நோய்த் தொற்றினால் பாதிக்கப்பட்டு, பெற்றோர் இருவரையும் இழந்து உறவினர் அல்லது பாதுகாவலரின் அரவணைப்பில் வளர்ந்து வரும் 365 குழந்தைகளுக்கு மாத பராமரிப்புத் தொகையாக ரூ.3 ஆயிரம் வீதம் ரூ.23 கோடியே 149 லட்சம் வழங்கியவர் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின்.

குழந்தைகளின் ஒட்டு மொத்தநல்வாழ்வினை மேம்படுத்தும் நோக்கில் "தமிழ்நாடு மாநில குழந்தைகள் பாதுகாப்புக் கொள்கை 2021" வெளியிட்டுக் குழந்தைகள் நலனை பாதுகாப்பதில் தனிக்கவனம் செலுத்தி வருகிறார்.

விடியல் பேருந்து திட்டம், முதலமைச்சரின் காலை உணவு திட்டம், புதுமைப் பெண் திட்டம், தமிழ்நாடு மாநில மகளிர் கொள்கை, சத்துணவுத் திட்ட மகளிர் மேம்பாட்டில் முதல்வர்,பணிபுரியும்மகளிர்விடுதிகள், பெண் குழந்தைகள் பாதுகாப்புத் திட்டம், மூத்த குடிமக்கள் கொள்கை, திருமண நிதி உதவித் திட்டம், திருநங்கைகள் நலன், ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சி திட்டபணிகள்துறை உள்ளிட்ட பல்வேறு துறைகளின் மூலம் எண்ணற்ற திட்டங்களை செயல்படுத்தி வருகிறார்.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் மகளிர் நலனில் தனிக் கவனம் செலுத்தி பல திட்டங்களை சீரிய முறையில் செயல்படுத்தி வருவதால் மகளிர், குழந்தைகள், மாற்றுத்திறனாளிகள் என அனைவரும் பாதுகாப்புடன் வாழ்வதால் முதலமைச்சரை மனமாரப் பாராட்டுகின்றனர். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.





விழுப்புரம் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில், விழுப்புரம்(தனி) நாடாளுமன்ற தேர்தல் வாக்குப்பதிவு நடைபெற்று முடிந்ததை தொடர்ந்து வாக்கு எண்ணும் மையத்தில் வாக்கு எண்ணிக்கையின்போது மேற்கொள்ளப்பட வேண்டிய முன்னேற்பாடு பணிகள் குறித்த ஆலோசனைக்கூட்டம் மாவட்ட தேர்தல் அலுவலர்/ மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் சி.பழனி,இ.ஆ.ப. அவர்கள் தலைமையில் இன்று (24.05.2024) நடைபெற்றது. உடன் மாவட்ட வருவாய் அலுவலர் திருமதி.மு. பரமேஸ்வரி, விழுப்புரம் வருவாய் கோட்டாட்சியர் காஜா சாகுல் ஹமீது, மாவட்ட ஆட்சியரின்நேர்முகஉதவியாளர்(தேர்தல்)தமிழரசன்,கள்ளக்குறிச்சிஉதவிஆணையர் (கலால்) சக்திவேல் உட்பட பலர் உள்ளனர்.

# முல்லைப் பெரியாற்றில் கேரளா அரசு புதிய அணை கட்டுவது சட்டவிரோதமானது: செல்வப்பெருந்தகை கண்டனம்

சென்னை, மே.25

தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி தலைவர் செல்வப்பெருந்தகை வெளியிட்டுள்ள அறிக்கையில்,

சுற்றுச்சூழல் தாக்க அறிக்கையை ஆய்வு செய்து தயார் செய்ய கடந்த பிப்ரவரி மாதம் ஒன்றிய அரசின் சுற்றுச்சூழல் நிபுணர் மதிப்பீட்டுக் குழுவிடம் கேரள அரசு விண்ணபித்துள்ளது.

இந்த விண்ணப்பம் வரும் 28ம் தேதி மதிப்பீட்டுக் குழுவின் பரிசீலனைக்காக பட்டியலிடப்பட்டு இருப்பதாக வந்திருக்கிற செய்தி தமிழகத்தின் உரிமைகளை பறிப்பதாக உள்ளது. கேரள அரசின் இத்தகைய முயற்சிகளை தமிழ்நாடு காங்கிரஸ் சார்பில் வன்மையாக கண்டிக்கிறேன்.



கடந்த 2012ம் ஆண்டு உச்ச நீதிமன்றம் அமைத்த வல்லுநர் குழு, அணை பாதுகாப்பாக இருப்பதாக அறிக்கை சமர்ப்பித்தது. இதையொட்டி 2014ம் ஆண்டு உச்ச நீதிமன்றம், தமிழகத்திற்கு பயன்படுகிற வகையில் நீர்மட்டத்தை 142 அடியாக உறுதி செய்து அனுமதி அளித்தது. அதே நேரத்தில், கேரள அரசு இயற்றிய சட்டத்தையும் உச்ச நீதிமன்றம் ரத்து செய்தது.

அணையை பலப்படுத்திய பிறகு 152 அடிவரை நீரை தேக்கலாம் என்று உச்ச நீதிமன்றம் கூறியதற்கு பிறகும் புதிய அணையை கட்டவும், பழைய அணையை இடிக்கவும் கேரள அரசு முயற்சிப்பது அப்பட்டமான சட்டவிரோத செயலாகவும், நீதிமன்ற அவமதிப்பாகவும் கருத வேண்டியிருக்கிறது.

முல்லைப் பெரியாறு அணையின் உறுதித்தன்மையை உச்ச நீதிமன்றம் அமைத்த வல்லுநர் குழுவால் உறுதி செய்யப்பட்ட பிறகு, கேரள அரசு இத்தகைய முயற்சிகளில் ஈடுபடுவதை உடனடியாக நிறுத்திக் கொள்ள வேண்டும். அதையும் மீறி தமிழக விவசாயிகளை பாதிக்கும் செயல்களில் கேரள அரசு ஈடுபடுமேயானால், உடனடியாக இதை தடுத்து நிறுத்துவதற்கு உச்ச நீதிமன்றத்தை நாடுகின்ற நடவடிக்கைகளை எடுக்கும்படி தமிழக முதல்அமைச்சரை கேட்டுக்கொள்கிறேன். என தெரிவித்துள்ளார்.

# சிங்கவரம் அருள்மிகு அரங்கநாதர் கோயிலில் வைகாசி 49 ஆம் ஆண்டு விசாக கருட சேவை உற்சவ விழா அமைச்சர் செஞ்சி மஸ்தான் கலந்து கொண்டு தேர்வை வடம் பிடித்து இழுத்து தொடங்கி வைத்து சாமி தரிசனம் செய்தார்

செஞ்சி,மே25

விழுப்புரம் மாவட்டம் செஞ்சியை அடுத்த சிங்கவரம் அருள்மிகு அரங்கநாதர் கோவில் வைகாசி விசாகம் முன்னிட்டு 49ம் ஆண்டு கருட சேவை உற்சவம் நேற்று காலையில் நடைபெற்றது.

இதை முன்னிட்டு காலை சுமார் 6 அளவில் மணிக்கு அருள்மிகு அரங்கநாயகி தாயார் சமேத அரங்கநாத சுவாமிக்கு செஞ்சி வாணிய வைசியஉபயதாரர்கள் சார்பில் சிறப்பு ஆராதனை மற்றும் திருமஞ்சணம் நடை பெற்று மகா தீபாரதனை நடைபெற்றது.

அதை தொடர்ந்து ரங்கநாதருக்கு சிறப்பு அலங்காரம் மற்றும் ஆராதனை செய்யப்பட்டு கருட சேவையில் எழுந்தருளி பக்தர்களுக்கு அருள் பாலித்தார். நிகழ்ச்சியில் தமிழக சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர்கள் நலத்துறை அமைச்சர் செஞ்சி மஸ்தான் கலந்து கொண்டு கருடசேவை தேர் வடம் இழுத்து தொடங்கி வைத்து சாமி தரிசனம் செய்தார்.



இதில் இந்து சமய அறநிலையத் துறைஉதவிஆணையர்ஜீவானந்தம், மாவட்ட அறங்காவலர் குழு உறுப்பினர் சத்யா சரவணன், மாவட்ட பிரதிநிதிகள் ஊராட்சி மன்ற தலைவர் மற்றும்ஏராளமானபக்தர்கள்கலந்து கொண்டு சாமி தரிசனம் செய்தனர.

# மனைவியை அபகரித்து கொண்டதால் ஆத்திரம்: கொலையில் முடிந்த பகை காங்கிரஸ் பிரமுகர் கைது





பூந்தமல்லி, மே.25

சென்னையை அடுத்த மாங்காடு பகுதியை சேர்ந்தவர் ராஜாஜி (வயது 45). இந்து மறுமலர்ச்சி முன்னேற்ற முன்னணி கட்சியின் மாநில தலைவரான இவர், நேற்று முன்தினம் மாலைபூந்தமல்லிஅடுத்த குமணன்சாவடியில் உள்ள டீ கடையில் அமர்ந்து டீ குடித்து கொண்டிருந்தார்.

அப்போது லுங்கி மற்றும் பனியன் அணிந்தபடி வந்த மர்மநபர் ராஜாஜியை அரிவாளால் சரமாரியாக வெட்டிக்கொலை செய்துவிட்டு அங்கிருந்து தப்பி சென்றுவிட்டார். பூந்தமல்லி போலீசார் கொலையான ராஜாஜி உடலை பிரேத பரிசோதனைக்காக கீழ்ப்பாக்கம் அரசு ஆஸ்பத்திரிக்கு அனுப்பி வைத்தனர். மேலும் இதுபற்றி வழக்குப்பதிவு செய்த போலீசார், அந்த பகுதியில் உள்ள கண்காணிப்பு கேமரா காட்சிகளை வைத்து விசாரணை நடத்தினர்.

விசாரணையில் கொலை சம்பவத்தில் ஈடுபட்டது, காட்டுப்பாக்கத்தை சேர்ந்த கிருஷ்ணகுமார் (34) என்பது தெரியவந்தது. தலைமறைவாக இருந்த கிருஷ்ணகுமாரை போலீசார் கைது செய்தனர். அவர் கொடுத்த தகவலின்பேரில் இந்த கொலை தொடர்பாக பூந்தமல்லியை சேர்ந்த காங்கிரஸ் பிரமுகரான கோபால் (55) மற்றும் கொலைக்கு உடந்தையாக இருந்த சம்பத், சந்தோஷ், ராஜேஷ் உள்பட 6 பேரை போலீசார் கைது செய்து விசாரணை நடத்தினர். அதில் பல திடுக்கிடும் தகவல்கள் வெளியானது.

கைதான காங்கிரஸ் பிரமுகர்கோபாலின்மனைவி கவுரி. இவர் கடந்த சில ஆண்டுகளாக கோபாலை விட்டு பிரிந்து கொலையான ராஜாஜியுடன் வசித்து வந்ததாக தெரிகிறது. அவர் கவுரியை தனது மனைவி எனக்கூறி சமூக வலைதளங்களில் இருவரும் ஒன்றாக இருக்கும் புகைப்படங்களை பதிவிட்டு வந்தார். சில மாதங்களுக்கு முன்பு சாலை விபத்தில் கவுரி இறந்து போனார்.

அதன்பிறகு தனது மனைவி கவுரி பெயரில் கல்வி அறக்கட்டளை தொடங்கி உள்ளதாக ராஜாஜி, பூந்தமல்லி மற்றும் அதனை சுற்றி உள்ள பகுதிகளில் போஸ்டர் ஒட்டியதுடன், சமூக வலைதளங்களிலும் வீடியோ வெளியிட்டு இருந்தார்.

இது கோபாலுக்கு ஆத்திரத்தையும், பெரும் அவமானத்தையும் ஏற்படுத்தியது. கோபால் சம்பாதித்த சொத்துகளில் பாதி கவுரியின் பெயரில் இருப்பதால் அந்த சொத்துகளை கேட்டும் கோபாலிடம் ராஜாஜி தகராறில் ஈடுபட்டு வந்தார்.

தனது மனைவியை அபகரித்து கொண்டதுடன், சொத்தையும் கேட்டதால் ராஜாஜி மீது கோபால் கடும்ஆத்திரத்தில்இருந்து வந்தார். இதற்கிடையில் ராஜாஜியின் தம்பியான ஆட்டோடிரைவர்கண்ணனுக்கும், கிருஷ்ணகுமாருக்கும் ஏற்கனவே மது அருந்துவதில் ஏற்பட்டதகராறில்கல்லை தூக்கி போட்டதில் கண்ணனின் காலில் எலும்பு முறிந்தது. இதனால் ராஜாஜியும், அவரது தம்பியும் கிருஷ்ணகுமாரை பழி வாங்க சந்தர்ப்பம் பார்த்து வந்ததாக தெரிகிறது.

இதனை அறிந்த கோபால், எதிரிக்கு எதிரி நண்பன் என்பதுபோல் கிருஷ்ணகுமாரை தொடர்பு கொண்டு, "உன்னை தீர்த்து கட்ட ராஜாஜி திட்டமிட்டு உள்ளார். அதற்குள் நீ முந்திக்கொள்" என்று தூண்டி விட்டதாக கூறப்படுகிறது.

இதனால் ஆத்திரமடைந்த கிருஷ்ணகுமார், டீ கடைக்குள் புகுந்து ராஜாஜியை வெட்டிக் கொன்றது விசாரணையில் தெரியவந்ததாக போலீசார் தெரிவித்தனர். கைதான 6 பேரிடமும் போலீசார் மேலும் விசாரித்து வருகின்றனர்.

# மனைவியுடன் தகராறு.. ஓடும் பஸ்சில் ஜன்னல் வழியாக குதித்த வாலிபர்

கோட்டயம், மே.25

கேரள மாநிலம் திருவனந்தபுரத்தில் இருந்து எர்ணாகுளத்துக்கு சென்ற அரசு பேருந்தில் எடையாழம் பகுதியை சேர்ந்த 34 வயதுடைய வாலிபர், தனது மனைவியுடன் பயணம் செய்தார்.

அப்போது அவர்கள் இருவருக்கும் இடையே திடீரென தகராறு ஏற்பட்டது. நேரம் செல்லச் செல்ல இருவருக்குமிடையேயான தகராறு முற்றியது.

இதனால் ஆத்திரமடைந்த அந்த வாலிபர் பஸ்சில் இருந்து இறங்க முயன்றார்.

பஸ்சை நடுவழியில் நிறுத்துமாறு கண்டக்டர் மற்றும் டிரைவரிடம் கேட்டார். ஆனால் அரசு போக்குவரத்துகழகநிறுத்தத்தில் மட்டுமே பஸ்சை நிறுத்தமுடியும் என்று அவர்கள் கூறினர்.

இதையடுத்து அந்த வாலிபர் யாரும் எதிர்பாராத வகையில், பஸ்சின் ஜன்னல் வழியாக ஓடும் பஸ்சில் இருந்து வெளியே குதித்தார். இதனால் பஸ்சில் இருந்த வாலிபரின் மனைவி மற்றும் சக பயணிகள் அதிர்ச்சியடைந்து கூச்சலிட்டனர். இதையடுத்து பஸ்சை டிரைவர் நிறுத்தினார். இதில் வாலிபருக்கு காலில் எழும்பு முறிவு ஏற்பட்டது. அவரை மீட்டு அருகில் உள்ள ஒரு ஆஸ்பத்திரியில் சேர்த்தனர். அங்கு அவருக்கு தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது.

மனைவியுடனான தகராறில் ஓடும் பஸ்சில் இருந்து வாலிபர் குதித்த சம்பவம் கோட்டயத்தில் பரபரப்பை ஏற்படுத்தியது.

# முகநூல் பக்கத்தில் 'லிங்க்' அனுப்பி சுருட்டும் கும்பல்: மந்திர 500 ரூபாயை தொட்டால் ரூ.5 ஆயிரம் கிடைப்பதாக நூதன மோசடி

ஆலந்தூர், மே. 25

சென்னையை அடுத்த ஆதம்பாக்கம் பிள்ளையார் கோவில் தெருவைச் சேர்ந்தவர் வினோத் (வயது 43). பெல்ட், மணிபர்ஸ் தைக்கும் தொழிலாளி.

இவரது மனைவி ரஞ்சினி (38). இவர், பள்ளி ஒன்றில் தொழிலாளியாக வேலை செய்து வருகிறார்.

வினோத், தனது செல்போனில் முகநூல் பக்கத்தை பார்த்து கொண்டிருந்தார்.

அதில், தமிழக முதல்அமைச்சர் புகைப்படம் போட்டு "500 ரூபாய் மந்திர நோட்டை தொட்டு, வெற்றி பெறுங்கள். ரூ.5 ஆயிரம் கேஷ் பேக் பெறுங்கள்" என்ற வாசகத்துடன் கவர்ச்சியான திட்டம் அறிவிக்கப்பட்டு இருந்தது.

அதில்இருந்த'லிங்க்'கை வினோத் 'கிளிக்' செய்தார். உடனடியாக அவரது செல்போனுக்கு உங்களது வங்கி கணக்கில் ரூ.5 ஆயிரம் வந்து இருப்பதாக குறுந்தகவல் வந்தது. இதனால் மகிழ்ச்சி அடைந்த வினோத், தனது 'ஜி பேயில்' வங்கி கணக்கு இருப்பை சரி பார்த்தார். அதில் இருந்த மனைவியின் சம்பள பணமான ரூ.4,650 மொத்தமாக எடுக்கப்பட்டு, வேறொரு வங்கி கணக்கிற்கு மாற்றப்பட்டு இருந்தது. இது தொடர்பாக மற்றொரு குறுஞ்செய்தியும் சிறிது நேரத்தில் வந்தது.

இதனால் வினோத் அதிர்ச்சியடைந்தார். சம்பள பணம் முழுவதையும் பறிகொடுத்ததால் கதறி அழுத கணவன்மனைவி இருவரும் இந்த நூதன மோசடி குறித்து ஆதம்பாக்கம் போலீசில் புகார் செய்தனர். மோசடி கும்பல் முதல்அமைச்சர் புகைப்படத்துடன் முகநூல் பக்கத்தில் மோசடியாக 'லிங்கை' அனுப்பி பணத்தை சுருட்டியது தெரிந்தது. இதுபற்றி போலீசார் விசாரித்து வருகின்றனர்.

# பூட்டிய வீட்டில் 5 பேர் பிணங்கள்: கடன் தொல்லையால் ஆசிரிய தம்பதிகள் எடுத்த விபரீத முடிவு



சிவகாசி, மே.25

விருதுநகர் மாவட்டம் ராஜபாளையம் அருகே உள்ள ராமச்சந்திராபுரத்தை சேர்ந்தவர் சுந்தரமகாலிங்கம். இவருடைய மனைவி பழனியம்மாள் (வயது 44). இவர்களுடைய மகள் ஆனந்தவள்ளி (24). இவர் 8 வயது சிறுமியாக இருந்தபோது சாலை விபத்தில் சுந்தர மகாலிங்கம் இறந்துவிட்டார்.

இந்தநிலையில் பழனியம்மாள் ஆசிரியை ஆனார். சிவகாசி அருகே உள்ள சுக்கிரவார்பட்டி அரசு நடுநிலைப்பள்ளியில் வேலை பார்த்து வந்தார். அதே பள்ளியில் சிவகாசி அருகே உள்ள நாகலாபுரத்தை சேர்ந்த லிங்கம் (வயது 44) என்பவரும் ஆசிரியராக பணியாற்றினார். இவர் பழனியம்மாளை விரும்பி திருமணம் செய்து கொண்டார். இவர்களுடைய மகன் ஆதித்யா (15). இவர்கள்திருத்தங்கல் ஸ்டேண்டர்டு காலனியில் உள்ள வீட்டில் வசித்து வந்தனர்.

இதற்கிடையே ஆசிரியர் லிங்கம், ராஜபாளையம் அருகே தேவதானத்தில் உள்ள அரசு தொடக்கப்பள்ளிக்கு இடமாறுதலாகி அங்கு வேலை செய்துவந்தார். கணவன், மனைவி இருவருக்கும் நோய் பாதிப்பு இருந்த நிலையில் மருத்துவ செலவுக்காக பலரிடம் கடன் வாங்கியதாக கூறப்படுகிறது.

இதற்கிடையில் ஆனந்தவள்ளியும் சென்னையை சேர்ந்த வாலிபர் ஒருவரும் சில ஆண்டுகளுக்கு முன்பு காதல் திருமணம் செய்து கொண்டனர். ஆனந்தவள்ளி கர்ப்பம் அடைந்த நிலையில், பிரசவத்துக்காக திருத்தங்கல்ஸ்டேண்டர்டு காலனியில் உள்ள தனது தாய் வீட்டிற்கு வந்திருந்தார். 3 மாதங்களுக்கு முன்னர் ஆனந்தவள்ளிக்கு பெண் குழந்தை பிறந்தது. சிறுவன் ஆதித்யா சிவகாசியில் உள்ள ஒரு பள்ளியில் 9ம் வகுப்பு தேர்வு பெற்று 10ம் வகுப்புக்கு செல்ல இருந்தான்.

ஆசிரியர் லிங்கம், அவரது மனைவி பழனியம்மாள் இருவரும் ஆசிரியர்களாக பணியாற்றி வந்தாலும், இவர்களுக்கு அதிக அளவில் கடன் இருந்ததாக கூறப்படுகிறது. இருவரும் 20க்கும் மேற்பட்டவர்களிடம் பல லட்ச ரூபாய் கடன் வாங்கி இருந்ததாக கூறப்படுகிறது.

கடனை திருப்பி செலுத்த முடியாமல் லிங்கம், பழனியம்மாள் தவித்தனர். கடன் கொடுத்தவர்கள் தொடர்ந்து நெருக்கடி கொடுத்து வந்த நிலையில், நேற்று கடன் வாங்கிய அனைவரிடமும் பணத்தை திருப்பி கொடுப்பதாக, ஆசிரியர் தம்பதியினர் உறுதி அளித்து இருந்ததாக கூறப்படுகிறது.

ஆசிரிய தம்பதியின் வீட்டின் கதவு நேற்று காலை திறக்கப்படாமல் உள்பக்கமாக பூட்டப்பட்டு இருந்தது. பகல் 11 மணி வரை வீட்டில் இருந்து யாரும் வெளியே வரவில்லை. இதனால் அந்த பகுதியை சேர்ந்தவர்கள் சந்தேகம் அடைந்து கதவை தட்டி உள்ளனர். உள்ளே இருந்து எந்த சத்தமும் கேட்கவில்லை. எனவே திருத்தங்கல் போலீசுக்கு தகவல் தெரிவித்தனர்.

அதன்பேரில் போலீசார் சம்பவ இடத்துக்கு விரைந்து வந்து, கதவை திறந்து உள்ளே சென்று பார்த்தபோது, அங்கு தனித்தனி அறைகளில் ஆசிரியர் லிங்கமும், அவரது மனைவி பழனியம்மாளும் தூக்கில் பிணமாக தொங்கினர். மற்றொரு அறையில் ஆனந்தவள்ளி, அவரது குழந்தை சஷ்டிகா, சிறுவன் ஆதித்யா ஆகியோர் பிணமாக கிடந்தனர். இந்த காட்சி அங்கிருந்தவர்களை அதிர்ச்சிக்கு உள்ளாக்கியது. 5 பேரின் உடல்களையும் மீட்டு பரிசோதனைக்காக விருதுநகர் அரசு ஆஸ்பத்திரிக்கு போலீசார் அனுப்பி வைத்தனர்.

# பெண்ணின் தலையில் விழுந்து வெடித்து சிதறிய பட்டாசு

கன்னியாகுமரி, மே.25

கன்னியாகுமரி மாவட்டம் அஞ்சுகிராமம் அருகே உள்ள காணிமடத்தில் ஒரு கோவில் கொடை விழா நடைபெற்றது. விழாவில் வாண வேடிக்கையுடன் சாமி ஊர்வலம் நடந்தது. இந்த திருவிழாவை காண ஏராளமான பொதுமக்கள் அங்கு திரண்டு நின்று வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தனர். இதில் அந்த ஊரை சேர்ந்த 48 வயது பெண்ணும் திருவிழாவை காண வந்திருந்தார். அப்போது வாண வேடிக்கையில் வானத்தை நோக்கி விடப்பட்ட ஒரு பட்டாசு திடீரென அருகில் உள்ள மரத்தின் மீது பாய்ந்தது. பின்னர், அந்த பட்டாசு மரத்தின் அருகில் நின்று வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்த அந்த 48 வயது பெண்ணின் தலை மீது விழுந்து வெடித்து சிதறியது. இதைக்கண்டு அருகில் நின்றவர்கள் நாலாபுறமும் சிதறி ஓடினர். இந்த சம்பவத்தில் அந்த பெண் தலையில் பலத்த காயம் ஏற்பட்டது. உடனே அங்கு நின்றவர்கள் அந்த பெண்ணை மீட்டு அருகில் உள்ள ஒரு தனியார் ஆஸ்பத்திரியில் சேர்த்தனர். அங்கு அவருக்கு தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. இதுகுறித்து அஞ்சுகிராமம் போலீசார் சம்பவ இடத்திற்கு விரைந்து சென்று விசாரணை நடத்தி வருகிறார்கள். இந்த சம்பவம் அஞ்சுகிராமம் பகுதியில் பெரும் பரபரப்பு ஏற்படுத்தி உள்ளது.

# சிறுவனுக்கு பாலியல் தொல்லை: போக்சோ சட்டத்தில் வாலிபர் கைது

தூத்துக்குடி, மே.25

தூத்துக்குடி மாவட்டம் நாலாட்டின்புத்தூர் அருகேயுள்ள லிங்கம்பட்டி புதுக்காலனி அண்ணாநகரைச் சேர்ந்த பொன்னுச்சாமி மகன் தர்மதுரை (வயது 24). தொழிலாளி. இவர் நேற்று முன்தினம் அப்பகுதியைச் சேர்ந்த 11 வயது சிறுவனிடம் ரூ.100ஐ கொடுத்து கடையில் சிகரெட் வாங்கிக் கொண்டு, உனக்கு மிட்டாய் வாங்கிக் கொண்டு வீட்டுக்கு வருமாறு கூறி அனுப்பி வைத்தார்.

இதைத்தொடர்ந்து கடைக்கு சென்ற சிறுவன் சிகரெட் மற்றும் மிட்டாய் வாங்கி கொண்டு தர்மதுரையின் வீட்டிற்கு சென்றான். அங்கு அவரிடம் சிகரெட் மற்றும் மீதிப்பணத்தை கொடுத்து விட்டு தனது வீட்டிற்கு செல்ல முயன்ற சிறுவனுக்கு பாலியல் தொல்லை கொடுத்துள்ளார். அவரிடம் இருந்து தப்பிய சிறுவன், இதுகுறித்து, தனது பெற்றோரிடம் தெரிவித்தான்.

அதிர்ச்சியடைந்த அவர்கள், இதுதொடர்பாக நாலாட்டின்புத்தூர் போலீஸ் நிலையத்தில் புகார் செய்தனர். போலீசார் விசாரணை நடத்தி தர்மதுரையை தேடி வந்தனர். இந்நிலையில் அவர், அங்குள்ள காட்டுப்பகுதியில் பதுங்கியிருந்துள்ளார். அப்பகுதிக்கு நேற்று போலீஸ் துணை சூப்பிரண்டு வெங்கடேஷ் தலைமையில் இன்ஸ்பெக்டர் (பொறுப்பு) விஜயக்குமார், போலீஸ் சப் இன்ஸ்பெக்டர்கள் அருள்சாம்ராஜ், ஜெயக்குமார் ஆகியோர் சென்று அவரை மடக்கி பிடித்தனர். பின்னர் போக்சோ சட்டத்தின்கீழ் வழக்குப்பதிவு செய்து அவரை போலீசார் கைது செய்தனர். இந்த சம்பவம் அப்பகுதியில் பெரும் பரபரப்பைஏற்படுத்தியுள்ளது.

# உலக அளவில் முதன்முதலாக உடல் கூறியல் துறையில் பைபர் கிளாஸ் எம்பெட்டிங் முறையை கண்டுபிடித்து தேனி அரசு மருத்துவக் கல்லூரி சாதனை



ஆண்டிபட்டி, மே. 25

தேனி மாவட்டம் ஆண்டிபட்டி அருகே உள்ள தேனி அரசு மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவமனை கடந்த 2004 ஆம் ஆண்டு முதல் செயல்பட்டு வருகிறது .இங்கு உள்நோயாளிகளாக 1600 பேரும், வெளி நோயாளிகளாக தினந்தோறும் 3000க்கும் மேற்பட்டோர் வந்து சிகிச்சை பெற்று செல்கின்றனர். தேனி மாவட்டம் மட்டுமல்லாது, அண்டை மாவட்டங்களில் இருந்தும், கேரளாவில் இருந்தும் ஏராளமான நோயாளிகள் இங்கு சிகிச்சை பெற்று நலமுடன் சென்று வருகின்றனர்.

பல்வேறு சாதனைகளை மருத்துவக் கல்லூரி பல கட்டங்களில் நிகழ்த்தி வருகிறது. அதில் ஒரு கட்டமாக உடற்கூறியல் துறையில் உடல் உறுப்புகள் மற்றும் அதன் முழு உடலை பாதுகாப்பாக வைக்க பைபர் கிளாஸ் எம்பெட்டிங் என்ற புதிய முறையை உலகிலேயே முதன் முதலில் தேனி அரசு மருத்துவக் கல்லூரி உடற்கூறியல் துறையில் துறை தலைவர் மருத்துவர் எழிலரசன் தலைமையிலான மருத்துவர் குழுவினர் அறிமுகப்படுத்தி சாதனை படைத்திருக்கிறார்கள். இதற்கான காப்புரிமையும் வேண்டி விண்ணப்பித்துள்ளார்கள்.

இதுகுறித்து மருத்துவ கல்லூரி முதல்வர் பாலசங்கர் தலைமையில் செய்தியாளர்களுக்கு பேட்டி அளிக்கப்பட்டது . அவர் கூறியதாவது உடல் கூறியல் அருங்காட்சியகத்தில் மனித உடல் மற்றும் உடல் உறுப்புகளை பாதுகாக்கும் முறைகளில் இழைக் கண்ணாடியில் பாதுகாக்கப்படுவது என்பது புதிய முயற்சியாகும். பிளாஸ்டினேசன் என்னும் முறை முதல் முதலில் ஜெர்மனியைச் சேர்ந்த கந்தர் என்பவரால் 1977ல் கண்டுபிடிக்கப்பட்டது .இந்தியாவில் ஒரு சில மருத்துவ கல்லூரிகளில் மட்டுமே இம்முறை கடைபிடிக்கப்பட்டு வருகிறது. அதிலும் அரசாங்க மருத்துவக் கல்லூரிகளில் அரசு தேனி மருத்துவக் கல்லூரியில் தான் முதல் முறையாக இம்முறை செய்யப்பட்டுள்ளது.

இம்முறை உடல் கூறியல் துறை தலைவரான மருத்துவர் எழிலரசன் என்பவரால் 2012ல் ஆரம்பிக்கப்பட்டது. இப்போது இந்த பிளாஸ்டினேசன் செய்த உடல் உறுப்புகள் மற்றும் அதன் முழு உடலை பாதுகாப்பாக வைக்க ஃபைபர் கிளாஸ் எம்பெட்டிங் என்ற புதிய முறையை உலகில் முதன் முதலில் அரசு தேனி மருத்துவக் கல்லூரி உடகூறியல் துறையில் அறிமுகப்படுத்தி இருக்கின்றோம். இதற்கு காப்புரிமை வேண்டியும் விண்ணப்பித்துள்ளோம். இம்முறையில் மனித சந்தையில் கிடைக்கும் பிசின் என்ற ரசாயன பொருளை உயர் வெப்பத்தில் 100 டிகிரி பிளாஸ்டினேசன் செய்யப்பட்ட உடல் மற்றும் உடல் உறுப்புகள் மீது ஊற்றப்பட்டு, மிகவும் குறைவான வெப்பம் (20 டிகிரி சென்டி கிரேட் ) உள்ள அறையில் 24 மணி நேரம் வைத்து, பின் அவைகள் உலர வைக்கப்படுகிறது .இந்த பைபர் கிளாஸ் எப்பெட்டிங் முறையில் தயாரிக்கப்படும் உறுப்புகள் மற்றும் மனித உடல்களை எளிதில் அழிக்க முடியாது. வருட கணக்கில் பாதுகாப் பாக வைக்கலாம். மேலும் இம்முறை சுற்றுச்சூழலுக்கு பாதுகாப்பானது .பார்மவின் திரவத்தின் பக்க விளைவுகள் எதுவும் மற்றது. உடல் கூறியல் துறையில் மாணவர்களின் கல்விக்கு உபயோகப்படுத்தலாம். நோய்க்குறியியல் துறைக்கான மாதிரிகளையும் இம்முறையில் பயன்படுத்தலாம் .குறைபாடு உள்ள சிசுக்கள், அறுவை சிகிச்சை செய்யப்பட்ட வேண்டாத மனித உறுப்புகள் ,குறுக்கு வெட்டு மாதிரிகள் போன்றவற்றையும் சம்பந்தப்பட்ட துறைகளில் வைத்து மாணவர்களின் கல்விக்கு உபயோகப்படுத்தலாம், என்று தெரிவித்தார். இந்த நிகழ்வின் போது மருத்துவ கண்காணிப்பாளர், ஆர் எம் ஓ ,துணை கண்காணிப்பாளர், துறை தலைவர்கள், மருத்துவர்கள் ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

அதனைத் தொடர்ந்து அருங்காட்சியகத்தில் வைக்கப்பட்ட புதிய கண்டு பிடிப்பு உடற்பாகங்கள் மற்றும் உடல்களை செய்தியாளர்களுக்கு காட்சிப்படுத்தினார்கள்.

# ஈரோடு ரயில் நிலையம் அருகே 20 கிலோ கஞ்சா கடத்திய ஒடிசா, பீகார் வடமாநில வாலிபர்கள் 2 பேரை மதுவிலக்கு போலீசார் மடக்கிப் பிடித்து கைது



ஈரோடு, மே. 25

ஒடிசா மாநிலத்தைச் சேர்ந்த நபர் ஒருவர், தொடர்ச்சியாக ஈரோட்டுக்கு ரெயிலில் கஞ்சாவை கடத்தி வருவதாக ஈரோடு மதுவிலக்கு போலீசாருக்கு ரகசியத் தகவல் கிடைத்தது.

அதன்பேரில், ஈரோடு மதுவிலக்கு போலீசார் சென்னையில் இருந்து ஈரோடு வந்த குறிப்பிட்ட அந்த ரெயிலில் சேலத்தில் ஏறி, குறிப்பிட்ட அந்த வாலிபரை கண்காணித்து பின் தொடர்ந்து வந்தனர்.

மேலும், அவர் யாரிடம் கஞ்சாவை கொடுக்கிறார் ? யார் யாருக்கெல்லாம் இதில் தொடர்புள்ளது என்பதை கண்டறிய ஈரோடு ரெயில் நிலையத்துக்கு வெளியிலும், மதுவிலக்கு டி.எஸ்.பி. சண்முகம் தலைமையிலான போலீசார் கண்காணிப்பில் ஈடுபட்டிருந்தனர்.

அப்போது, ரெயிலில் வந்த வாலிபர் ஈரோடு ரயில் நிலையம் வந்ததும் ரெயிலை விட்டு இறங்கி ஈரோடு ரெயில் நிலையம் வெளியில் வந்தார். தான் கொண்டு வந்த பையை மற்றொரு வாலிபரிடம் கொடுத்தார்.

அப்போது, சேலத்தில் இருந்து பின் தொடர்ந்து வந்த போலீசாரும், ரெயில் நிலையத்துக்கு வெளியில் காத்திருந்த போலீசாரும் இருவரையும் சுற்றி வளைத்து பிடித்தனர்.

பின்னர் அவர்களை ஈரோடு மாவட்ட மதுவிலக்கு போலீஸ் நிலையத்துக்கு கொண்டு சென்று தீவிர விசாரணை மேற்கொண்டனர்.

அதில், ரெயிலில் கஞ்சா கடத்தி வந்த வாலிபர் ஒடிசா மா நிலத்தைச் சேர்ந்த மனோஜ்குமார் (32) என்பதும், அடிக்கடி ஈரோடு வந்து செல்லும் அவர் அங்கிருந்து ரெயில் மூலமாக கஞ்சாவை கடத்தி வந்து, ஈரோட்டில் விற்பனைக்கு வினியோகம் செய்து வந்ததும் தெரியவந்தது.

ஈரோட்டில், மனோஜ்குமாரிடம் கஞ்சாவை வாங்கிச் செல்ல வந்திருந்தவர் *பிகார் மாநிலத்தைச் சேர்ந்த அமான்குமார் (27) என்பதும் போலீசார் விசாரணையில் தெரியவந்தது. அமான் குமார் உடுமலைப் பேட்டையில் உள்ள ஒரு மில்லில் வேலை பார்த்து வருகிறார். அவரிடம் *ஒடிசா மாநிலத்தைச் சேர்ந்தவர்மனோஜ் குமார்* அவ்வப்போது வந்து கஞ்சா கொடுத்தது தெரியவந்தது.

இதையடுத்து, போலீசார் அவர்களிடமிருந்த 20 கிலோ கஞ்சாவை பறிமுதல் செய்தனர். அவர்கள் இருவரையும் மதுவிலக்கு இன்ஸ்பெக்டர் சண்முகம் அவரைப் பிடித்து விசாரித்து கைது செய்து உள்ளார் மேலும், இந்த கஞ்சா கடத்தலில் வேறு யாருக்கெல்லாம் தொடர்புள்ளது என்பது குறித்து தீவிர விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

ரயிலில் கஞ்சாவை கடத்தி வந்த மனோஜ்குமார் மீது ஈரோடு மாவட்டம், பெருந்துறை போலீசில் ஏற்கனவே கஞ்சா வழக்கு ஒன்று நிலுவையில் இருக்கிறது என்பது குறிப்பிடத்தக்கது.

# கோவை ஈஷா நவீன எரிவாயு மயான கட்டுமான செயல்பாடுகளை விரைவுபடுத்த கிராம மக்கள் மனு

கோவை, மே. 25

ஈஷாவில் கட்டப்பட்டு வரும் நவீன எரிவாயு மயானத்திற்கு எதிராக பொய் செய்திகளை பரப்பி, அப்பணிக்கு இடையூறு ஏற்படுத்தும் வெளியூர் நபர்கள் மீது அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என ஈஷாவை சுற்றியுள்ள 6 கிராம மக்கள் கோவை மாவட்ட ஆட்சியரிடம் இன்று ஒன்றாக (மே 24) மனு அளித்தனர்.

இது தொடர்பாக அக்கிராம மக்கள் கூறியதாவது:

தாணிக்கண்டி, மடக்காடு, முள்ளாங்காடு, பட்டியார் கோவில்பதி, முட்டத்துயல், செம்மேடு ஆகிய 6 கிராம மக்கள் சார்பாக நாங்கள் மாவட்ட ஆட்சியரிடம் கோரிக்கை மனுக்களை அளித்துள்ளோம். இதில் 4 கிராமங்கள் பழங்குடி கிராமங்கள் ஆகும்.

எங்கள் கிராமங்களில் சரியான மயான வசதி இல்லாததன் காரணமாக இறந்தவர்களுக்கான இறுதி சடங்குகளை செய்வதற்கு நாங்கள் 20 கி.மீ வரை செல்ல வேண்டி உள்ளது. இதனால்,



பொருளாதார ரீதியாக பல சிரமங்களை சந்தித்து வருகிறோம். அனைத்து உறவினர்களையும் ஒன்று சேர்த்து செய்யும் சடங்களை செய்வதிலும் சிரமங்களை சந்தித்து வருகிறோம்.

எனவே, எங்கள் கிராமத்திற்கு அருகிலேயே நல்லதொரு மயானம் அமைக்க வேண்டும் என்று பல ஆண்டுகளாக கோரிக்கை விடுத்து வருகிறோம். இதற்காக ஒவ்வொரு கிராம மக்களும் தனி தனியாக, மாவட்ட ஆட்சியர், வட்டாட்சியர், பஞ்சாயத்து தலைவர் உள்ளிட்டோரிடம் மனுக்கள் அளித்துள்ளோம்.

இதன் பயனாக, எங்கள் கிராமத்திற்கு அருகில் உள்ள ஈஷா வளாகத்தில் பொதுமக்கள் பயன்பாட்டிற்காக அவர்களுடைய செலவில், நவீன எரிவாயு மயானம் ஒன்று கட்டுப்பட்டு வரும் செய்தி அறிந்து மிகுந்த மகிழ்ச்சி அடைந்தோம். கல்வி, வேலைவாய்ப்பு, மருத்துவம் என எங்களுடைய கிராமங்களுக்கு பல உதவிகளை ஈஷா செய்து வருகிறது. அதன் தொடச்சியாக, இப்போது அரசு அனுமதியுடன் நவீன எரிவாயு மயானமும் கட்டி வருகிறது. இந்த நல்ல செயலுக்கு 6 கிராம மக்களும் முழு ஆதரவு தெரிவித்துள்ளோம். இந்த சூழலில், சிவஞானம், காமராஜ், சுப்பிரமணியன் மற்றும் இன்னும் சில வெளியூர் நபர்கள், அமைப்புகள் ஈஷாவில் கட்டுப்பட்டு வரும் எரிவாயு மயானப் பணிகளை தடுக்கும் செயல்களில் ஈடுபட்டு வருகின்றனர். அவர்கள் எங்கள் கிராமங்களுக்குள் அத்துமீறி நுழைந்து பொய் செய்திகளை பரப்பி ஊர் அமைதியை சீர்குலைக்கும் செயல்களில் ஈடுபட்டு வருகின்றனர். மேலும், அந்த வெளியூர் நபர்கள் சில ஊடகங்களில் ஈஷாவிற்கு எதிராக அவதூறாக பேட்டியும் அளித்து வருகின்றனர்.

எனவே, எங்கள் கிராம மக்களுக்கு எதிராக செயல்படும் இவர்கள் மீது அரசு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும், ஈஷாவில் கட்டப்பட்டு வரும் நவீன எரிவாயு மயானப் பணிகள் எவ்வித இடையூறும் இன்றி விரைந்து முடிக்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும், மாவட்ட ஆட்சியரிடம் கோரிக்கை மனு அளித்துள்ளோம்.

# வள்ளலார் சத்திய தருமச்சாலையில் ஆயிரம் குடும்பங்களுக்கு மக்கள் நலத்திட்டம்

விழுப்புரம், மே 25

விழுப்புரம் வள்ளலார் சத்திய தர்மசாலை சார்பில் ஆயிரம் குடும்பங்களுக்கு உணவு பொருள் நலத்திட்டங்கள் வழங்கி பொதுமக்களுக்கு அன்னதானம் வழங்கப்பட்டது.

வடலூர் அணையா அடுப்பு எனும் சத்திய தருமச்சாலை 158வது ஆண்டு துவக்க நாளையொட்டி, விழுப்புரம் வள்ளலார் சத்திய தருமச்சாலை சன்மார்க்க அன்பர்கள் சார்பில் ஆதரவற்ற கணவரால் கைவிடப்பட்டவர்கள், மாற்றுத்திறனாளிகள், ஆயிரம் குடும்பங்களுக்கு 5 கிலோ அரிசி, 1000 நபர்களுக்கு சிறப்பு அன்னதானம வழங்கும் மக்கள் நலத்திட்டம் நடைபெற்றது. நிகழ்ச்சிக்கு எஸ்.ஆர். செல்லமுத்து தலைமைதாங்கினார். ஐசிஜசிஜ வங்கி அப்ரைசர் சிவக்குமார் முன்னிலை வகித்தார். பாலசுப்ரமணியன் வரவேற்புரை நிகழ்த்தினார்.



நலத்திட்டத்தை மாவட்ட தி.மு.க பிரமுகர் க. கோபிசிகாமணி விழுப்புரம் நகராட்சி ஆணையாளர் போ.வி.சுரேந்திரஷா, முன்னாள் நகர மன்றத் தலைவர் இரா. ஜனகராஜ், நகர மன்றத் தலைவர் தமிழ்ச்செல்வி பிரபு, மாநில சன்மார்க்க சங்கத் தலைவர் ஈரோடு, டாக்டர் அருள் நாகலிங்கம் ஆகியோர் தொடங்கிவைத்தனர்.

நிகழ்ச்சி ஏற்பாடுகளை விழுப்புரம் வள்ளலார் அருள்மாளிகை மேனேஜிங் டிரஸ்டி ஜெய அண்ணாமலை, டிரஸ்டிகள் சா. பலராமன், க. பாரதி, இரா. சரவணபவன், மெக்கானிக் கோ. இராமலிங்கம், மு.வேல்முருகன், சிவ.சக்திவேல் , வழக்கறிஞர் பொய்கை சங்கர். சிவானந்தம் டைலர், பிரேம்ராஜன். வாசுதேவன், டி.வி. மெக்கானிக் .சங்கர், கால்நடைத்துறை வெங்கடேசன், வைரமணி, ஆகியோர் செய்திருந்தனர்.

# தேன்கனிக்கோட்டை பேரூராட்சி மன்ற கவுன்சிலர் பிறந்தநாள் விழா

கிருஷ்ணகிரி மே,25

கிருஷ்ணகிரி மேற்கு மாவட்டம் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி கிருஷ்ணகிரி மேற்கு மாவட்ட செயலாளர் தளித் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் டி. இராமச்சந்திரன் அவர்களின் ஆசிப்பெற்ற, தேன்கனிக்கோட்டை தேர்வு நிலை பேரூராட்சி 15வது வார்டு கவுன்சிலர் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி பிரமுகர் ஜெயந்தன் அவர்களின் பிறந்தநாள் முன்னிட்டு இந்திய கம்யூனிஸ்ட் கட்சி விவசாய அணி மாநிலத் துணைத் தலைவர் இலகுமையா அவர்கள் நேரில் சென்று ஜெயந்தன் அவர்களுக்கு கேக்வெட்டி,பொன்னாடை போர்த்தி,பூ மாலை அணிவித்து மரியாதை செய்தார் . ஜெயந்தன் அவர்களுக்கு பல்வேறு கட்சி நிர்வாகிகள்,மற்றும் தொழிலதிபர்கள் என பலர் வாழ்த்து கூறினார்கள், இந்த நிகழ்வில் ரவி, சுமலதா ஜெயந்தன், கவுன்சிலர் முனுசாமி, ஸ்ரீனிவாஸ்,பால் வியாபாரி வெங்கடேஷ், வீரப்பா மற்றும் மாநில மாவட்ட ஒன்றிய நகர இந்திய கம்யூனிஸ்ட் கட்சி நிர்வாகிகள், என பலர் இந்த விழாவில் பங்கேற்றனர்.



# நீலகிரி மாவட்டம், குன்னூர் சிம்ஸ் பூங்காவில், தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள்துறை சார்பில் 64-வது பழக்காட்சி

ஊட்டி, மே. 25

நீலகிரி மாவட்டம், குன்னூர் சிம்ஸ் பூங்காவில், தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை சார்பில் 64வது பழக்காட்சியினை மாவட்ட கலெக்டர் மு.அருணா ரிப்பன் வெட்டி தொடங்கி வைத்து, பார்வையிட்டார்.

பின்னர் மாவட்ட கலெக்டர் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது :

இந்தியாவின் தலைசிறந்த சுற்றுலா தலமாக விளங்கும் நீலகிரி மாவட்டத்தில் சுற்றுலா பயணிகளை கவரவும், அவர்களை உற்சாகப்படுத்தவும் வருடந்தோறும் தோட்டக்கலைத் துறை மற்றும் மாவட்ட நிர்வாகத்தின் மூலம் பல்வேறு காட்சிகள் நடத்தப்பட்டு வருகிறது. இந்த வருடம் தேர்தல் மாதிரி நடத்தை விதிமுறைகள் நடப்பில் உள்ளதால் அரசு தாவரவியல் புங்காவில் மலர் காட்சி, அரசு ரோஜா புங்காவில் ரோஜா காட்சி மற்றும் சிம்ஸ் புங்கா, குன்னூரில் பழக்காட்சி நடத்த முடிவெக்கப்பட்டு, கடந்த 10 ஆம் தேதி மலர் காட்சி மற்றும் ரோஜா காட்சி துவக்கி வைக்கப்பட்டது. இதனை தொடர்ந்து 64வது பழக்காட்சி இன்று துவக்கி வைக்கப்பட்டுள்ளது. இவ்வருடம் பழக்காட்சிக்கு வருகை புரியும் சுற்றுலா பயணிகளுக்கு மலர் நாற்றுக்கள் வழங்கப்படவுள்ளது. சுற்றுலா பயணிகள் மற்றும் பொது மக்கள் கண்டுகளிக்கும் வகையில் தோட்டக்கலைத் துறையின் மூலம் பல்வேறு கலை நிகழ்ச்சிகளும் நடத்தப்படுகிறது. இப்பழக்காட்சியானது இன்று 24.05.2024 துவங்கி, 26.5.2024 வரை மூன்று நாட்கள் நடைபெறவுள்ளது.

இக்கண்காட்சியில் சுமார் 5.50 டன் பழங்களை கொண்டு பல்வேறு உருவங்கள் அமைக்கப்பட்டுள்ளது. சிறப்பம்சமாக சுமார் 1.75 டன் கருப்பு திராட்சை பழங்களை கொண்டு ரூநரழவ்கிங் காங்ரூதூ39 உருவம் 6 அடி அகலம், 15 அடி உயரத்தில் வடிவமைக்கப்பட்டுள்ளது.

தற்போது நாம் உண்ணும் உணவுகளில் உள்ள இரசாயன நச்சுப் பொருட்களை குறைத்து, உலகில் வாழும் அனைத்து உயிரினங்களை காப்பாற்ற உறுதுணையாக இருக்கும் இயற்கை விவசாயத்தை ஊக்குவிக்கும் பொருட்டு போன்ற வாசகங்கள் காட்சிப்படுத்தப் பட்டுள்ளது. எலுமிச்சை மற்றும் ஆரஞ்சு பழங்களை கொண்டு வடிவமைக்கப்பட்டு காட்சிப்படுத்தப் பட்டுள்ளது.

சிம்ஸ் புங்கா உருவாக்கப்பட்டு, 150 வருடங்கள் ஆனதை கொண்டாடும் வகையில் தோட்டக்கலைத்துறை மூலம் பல்வேறு வகையான 150 ரக பழங்கள் காட்சிப்படுத்தப் பட்டுள்ளது. சிறுவர்களை கவரும் வகையில், கார்ட்டுன் உருவங்களான டம்பெல் டக், மினியன், டைனோசர், பிக்காச்சு, நத்தை போன்ற உருவங்கள் சுமார் 1.50 டன் எலுமிச்சை, திராட்சை, சாத்துக்குடி, ஆரஞ்சு, செர்ரி மற்றும் பேரிச்சை பழங்களை கொண்டு வடிவமைக்கப்பட்டுள்ளது.

மேலும், தமிழ்நாட்டில் உள்ள பிற மாவட்டங்களின் பழங்களின் வளங்களை பறைசாற்றும் விதமாக பல்வேறு காட்சி திடல்கள் அமைக்கப்பட்டுள்ளது. கிருஷ்ணகிரி மாவட்டம் புஜ்ஜி, தஞ்சாவுர் மாவட்டம் தலையாட்டி பொம்மை, கன்னியாகுமரி மாவட்டம் தேனீ, நாமக்கல் மாவட்டம் டிராகன், கரூயஅர் மாவட்டம் அன்னபறவை, கடலூர் மாவட்டம் கலங்கரை விளக்கம், மதுரை மாவட்டம் மரவன் பட்டாம்பூச்சி, திருச்சி மாவட்டம் பாண்டா, பெரம்பலூர் மாவட்டம் இந்தியா கேட் மற்றும் கோவை மாவட்டம் ஒட்டகம் போன்ற உருவங்கள் காட்சிபடுத்தப்பட்டுள்ளது. சுற்றுலா பயணிகள் வருகை புரிந்து, இப்பழக்காட்சியினை கண்டுகளிக்க வேண்டும் என மாவட்ட கலெக்டர் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

முன்னதாக மாவட்ட கலெக்டர், குன்னூர் எம்.ஆர்.சி பேண்ட் குழுவினரின் கலைநிகழ்ச்சிகளை பார்வையிட்டார்.

இந்நிகழ்வில், கூடுதல் ஆட்சியர் (வளர்ச்சி) கௌசிக் தோட்டக்கலைத் துறை இணை இயக்குநர் ஷிபிலா மேரி, குன்னூர் வருவாய் கோட்டாட்சியர் சதீஷ், தோட்டக்கலை துறை துணை இயக்குநர்கள் அப்ரோஸ் பேகம், நாகராஜன், குன்னூர் வட்டாட்சியர் கனிசுந்தரம், குன்னூர் வட்டார வளர்ச்சி அலுவலர் சந்திரசேகர், உட்பட தோட்டக்கலைத்துறை அலுவலர்கள் பலர் உள்ளனர்.

# மேலூர் காமாட்சி அம்மன் கோவில் வைகாசி திருவிழா ஆயிரக்கணக்கானோர் கலந்து கொண்ட சிறப்பு அன்னதானம்

மேலூர் மே,25

மேலூர் விஸ்வகர்மா சமுதாய மக்களுக்கு பாத்தியப்பட்ட அருள்மிகு ஓம் ஸ்ரீ காமாட்சி அம்மன் திருக்கோவிலில் 46 ஆம் ஆண்டு வைகாசி மாத உற்சவ விழாவை முன்னிட்டு கடந்த 8ம் தேதி அம்மனுக்கு காப்பு கட்டி பக்தர்கள் விரதம் இருந்து வந்தனர்.

22ம் தேதி மண்கட்டி தெப்பகுளத்திலிருந்து கோவில் பூசாரி சக்தி கரகம் எடுத்த வந்தார். பெண்கள் கோயில் முன்பு பொங்கல் வைத்து, திருவிளக்கு பூஜை சிறப்பாக நடைபெற்றது.




தொடர்ந்து 100க்கும் மேற்பட்ட காப்பு கட்டிய பக்தர்கள் பால்குடம் எடுத்து மேலூரில் முக்கிய வீதிகளில் ஊர்வலமாக கோவிலுக்கு வந்து காமாட்சி அம்மனுக்கு பாலபிஷேகம் சிறப்பாக நடைபெற்றது. 200க்கும் மேற்ப்பட்ட பெண்கள் முளைப்பாரி எடுத்து நகரின் முக்கிய வீதிகளில் ஊர்வலம் வந்தனர். அம்மனின் ரத ஊர்வலத்தை பொதுமக்கள் சாமி கும்பிட்டு தரிசனம் செய்தனர். தொடர்ந்து நேற்று காலை 11 மணியளவில் சிறப்பு அன்னதானம் கோவில் முன்பு நடைபெறுகிறது. நிகழ்ச்சி ஏற்பாட்டினை திருக்கோவில் தலைவர் எஸ்.எம்.சரவணகுமார் மற்றும் விழா குழுவினர் ஏற்பாடு செய்து இருந்தனர்.

# பூங்காவில் விளையாடிய 2 சிறுவர்கள் மின்சாரம் தாக்கி உயிரிழப்பு

கோவை, மே.25

கோவை சரவணம்பட்டி சின்னவேடம்பட்டி துடியலூர் ரோடு ராமன் விஹார் பகுதியில் அடுக்குமாடி குடியிருப்புகள் உள்ளன. இங்கு குழந்தைகள் விளையாட பூங்கா அமைக்கப்பட்டுள்ளது. இந்த பூங்காவில் அங்குள்ள குழந்தைகள் மாலை நேரத்தில் விளையாடுவது வழக்கம். இதற்காக அங்கு ஊஞ்சல், சறுக்கு உள்ளிட்ட விளையாட்டு உபகரணங்கள் அமைக்கப்பட்டு உள்ளன

இந்தபூங்காவில் அங்கு வசிக்கும் பிரசாந்த் ரெட்டி மகன் ஜியான்ஸ் ரெட்டி(வயது 6), பாலசந்தர் மகள் வியோமா பிரியா(8) ஆகிய இருவரும் தனது நண்பர்களுடன் விளையாடி கொண்டிருந்தனர். அப்போது அங்குள்ள சறுக்கில் 2 பேரும்விளையாடியதாக தெரிகிறது. இவர்களுக்கு அருகே மற்ற குழந்தைகளும் விளையாடி கொண்டிருந்தனர்.

சறுக்கில் ஏறி, இறங்கி சந்தோஷமாக விளையாடி கொண்டிருந்த வியோமா பிரியா, ஜியான்ஸ் ரெட்டி ஆகிய இருவரும் திடீரென மின்சாரம் தாக்கப்பட்டு மயங்கி விழுந்தனர். இதை அங்கிருந்த குழந்தைகள் பார்த்து அதிர்ச்சி அடைந்தன. மேலும் அவர்களின் பெற்றோரிடம் ஓடி சென்று தெரிவித்தன.

அவர்கள் உடனடியாக ஓடி வந்து மயங்கி கிடந்த ஜியான்ஸ் ரெட்டி, வியோமா பிரியா ஆகிய இருவரையும் தூக்கி கொண்டு அருகில் உள்ள தனியார் ஆஸ்பத்திரிக்கு சிகிச்சைக்காக கொண்டு சென்றனர். அங்கு குழந்தைகள் இருவரையும் பரிசோதனை செய்த டாக்டர்கள் அவர்கள் ஏற்கனவே உயிரிழந்து விட்டதாக தெரிவித்தனர்.

இதுகுறித்த தகவலின் பேரில் சரவணம்பட்டி போலீசார் சம்பவ இடத்திற்கு விரைந்து சென்ற விசாரணை நடத்தினர்.

உயிரிழந்த குழந்தைகளின் உடலை பார்த்து பெற்றோர்கள் கதறி அழுதது அங்கிருப்பவர்களை சோகத்தில் ஆழ்த்தியது.

பூங்காவில் அமைக்கப்பட்டு இருந்த இரும்பு சறுக்கில் விளையாடியபோது அதில் மின்சாரம் பாய்ந்து இருந்ததால் சிறுவர்கள் இறந்து இருக்கலாம் என தெரிகிறது. இந்த சம்பவம் அப்பகுதியில் சோகத்தை ஏற்படுத்தி உள்ளது.

# வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை அரசினர் தொழிற்பயிற்சி நிலையம் கோபிசெட்டிபாளையம் மற்றும் ஈரோடு 2024 ஆம் ஆண்டு ஐ.டி.ஐ சேர்க்கைக்கு விண்ணப்பிக்கலாம்

ஈரோடு, மே. 25

கோபிசெட்டிபாளையம் (பெரிய கொடிவேரி) மற்றும் ஈரோடு (காசிபாளையம்) அரசினர் தொழிற்பயிற்சி நிலையத்தில் 2024 ஆம் பயிற்சி ஆண்டிற்கான சேர்க்கை 07.06.2024 வரை விண்ணப்பிக்கலாம். (வயது வரம்பு : ஆண்கள் 14 40 பெண்கள் : வயது வரம்பு இல்லை ) பத்தாம் வகுப்பு மற்றும் அதற்கு மேல் தேர்ச்சி பெற்றவர்கள் எலக்ட்ரீசியன் இபிட்டர், மெக்கானிக் மோட்டார் வெகிக்கிள், ரெப்ரிஜெரேசன் மற்றும் ஏர்கன்டிசனிங் டெக்னீசியன், டர்னர், மெஷினிஸ்ட், கோபா, ட்ராப்ட்மேன் சிவில், மற்றும் டெக்ஸ்டைல் வெட் ப்ராஸஸிங் டெக்னீஷியன் ஆகிய தொழிற்பிரிவுகளிலும, எட்டாம் வகுப்பு தேர்ச்சி பெற்றவர்கள் வெல்டர் மற்றும் ஒயர்மேன் தொழிற்பிரிவிலும், மேலும் வுயுவுயு வுநஉழெடழபல நிறுவனத்துடன் இணைந்து தொழில்நுட்பமையங்களாக உயர்த்தப்பட்டு அதன் கீழ் புதிய தொழிற்பிரிவுகளான அட்வான்ஸ்டு ஊ ஊ மிஸினிங் டெக்னீஸியன் 2 வருடம், மெக்கானிக் மோட்டார் வெகிக்கிள் 2 வருடம், மேனுபேக்ச்சரிங் கண்ட்ரோல் ரூ ஆட்டோமேசன் 1 வருடம், இன்டஸ்ரியல் ரோபோடிக்ஸ் ரூயஅ டிஜிட்டல் மேனுபேக்ச்சரிங் டெக்னீஸியன் 1 வருடம், பேசிக் டிசைனர் மற்றும் விர்ச்சுவல் வெரிபையர் 2 வருடம், போன்ற தொழிற்பிரிவிலும், பயிற்சியில் சேர கோபிசெட்டிபாளையம் மற்றும் ஈரோடு அரசினர் தொழிற்பயிற்சி நிலையத்தினை நேரில் அணுகவும்.

பயிற்சியில் சேரும் மாணவ மாணவியருக்கு சிறந்த கட்டணமில்லா பயிற்சியுடன் இலவச தங்கும் விடுதி, தமிழக அரசால் மாதம் ரூ.750 உதவித் தொகை, புதுமைப்பெண் திட்டத்தில் தகுதியான மாணவியர்களுக்கு மாதம் ரூ.1000 உதவித் தொகை, விலையில்லா பாடபுத்தகங்கள், விலையில்லா மடிக்கணினி, மிதிவண்டி, வரைபடக் கருவிகள், தையற்கூலியுடன் இரண்டு செட் சீருடை, காலணி, மற்றும் கட்டணமில்லா பேருந்து பாஸ் ஆகிய சலுகைகள் வழங்கப்படும்.

மேலும், விபரங்களுக்கு முதல்வர், அரசினர் தொழிற்பயிற்சி நிலையம், பெரிய கொடிவேரி, கோபிசெட்டிபாளையம், மற்றும் முதல்வர், அரசினர் தொழிற்பயிற்சி நிலையம், ஈரோடு (காசிபாளையம்) அவர்களை நேரிலோ அல்லது 94990 55705, 04258233234, 04242275244 ஆகிய தொலைப்பேசி எண்களிலோ தொடர்பு கொண்டு பயன்பெறலாம் என தெரிவிக்கப்படுகிறது.

# ராஜபாளையத்தில் 3 தினங்கள் நடைபெறும் கபடி போட்டிகள் துவக்கம்

ராஜபாளையம், மே. 25

விருதுநகர் மாவட்டம் ராஜபாளையத்தில் விருதுநகர் மாவட்ட அளவிலான கபடி போட்டிகள் துவங்கப்பட்டுள்ளது. ராஜபாளையம் நகர தொழில் தந்தை பிஏசி ராமசாமி ராஜா நினைவு கபடி போட்டிகள் 61 ஆண்டாக ராஜபாளையத்தில் துவங்கியது. கபடி கழக தலைவர் கபடி ஏ பி எஸ் ராஜா தலைமையில் மாவட்ட துணை தலைவர் டைகர் சம்சுதீன் போட்டிகளை துவக்கி வைத்தார். துணைச் செயலாளர் டி ராம்சிங், மற்றும் ராமச்சந்திர ராஜா ஆகியோர் முன்னிலையில் போட்டிகள் நடைபெற்றது. இதில் முகவூர் தவம் ஸ்போர்ட்ஸ் கிளப் அணியும் அய்யனாபுரம் ஒய்ஏ கேசி அணியும் முதலாவது ஆட்டத்தில் மோதின. இதில் தவம் ஸ்போர்ட்ஸ் கிளப் முகவூர் அணி 3913 புள்ளிக் கணக்கில் வெற்றி பெற்றது. தொடர்ந்து தளவாய்புரம் தமிழ்த்தாய் அணியும் அய்யனாபுரம் இளம் புலிகள் அணியும் மோதியது. ராஜபாளையம் எவர் ஸ்கிரீன் ராஜபாளையம் ராஜுக்கள் கல்லூரி அணியும் தொடர்ந்து மோதியது. நாளை கால் இறுதிப் போட்டிகளும், நாளை மறுதினம் அரை இறுதிப் போட்டிகளும், மகளிருக்கான இறுதிப் போட்டிகளும் நடத்தப்பட்டு பரிசளிப்பு விழா நடைபெற உள்ளது. ஏற்பாடுகளை பிஏசி ராமசாமி ராஜா நினைவு கபடி குழு மற்றும் விருதுநகர் மாவட்ட அமைச்சூர் கபடி குழுவினர் சிறப்பாக செய்து வருகின்றனர்.



நமது தின கனி

Title-Code:-TNTAM24615
R.Dis No:- 968/2023

25.5.2024

## 'ராயன்' படத்தின் 2வது பாடல் வெளியாகிறது



சன் பிக்சர்ஸ் நிறுவனத்தின் தயாரிப்பில் தனுஷ் இயக்கி நடிக்கும் 'ராயன்' படத்தின் படப்பிடிப்பு முடிவடைந்தது. தற்போது தொழில்நுட்பபணிகள்விறுவிறுப்பாகநடைபெற்று வருகின்றன.

தனுஷ் நடித்து இயக்கும் அவரது 50வது படமான 'ராயன்' படத்தின் படப்பிடிப்பு முடிந்த நிலையில் இந்த படம் ஜூன் மாதம் வெளியாக உள்ளது.துஷாரா விஜயன், அபர்ணா பாலமுரளி, வரலட்சுமி சரத்குமார் ஆகிய மூன்று நாயகிகள் நடிக்கும்இந்தபடத்திற்குஏஆர்ரகுமான்இசையமைத்துள்ளார். ராயன் படத்தில் எஸ்.ஜே.சூர்யா, செல்வராகவன், பிரகாஷ் ராஜ், துஷாரா விஜயன், அபர்ணா பாலமுரளி, வரலட்சுமி உள்ளிட்ட பலர் நடித்துள்ளனர். இந்த நிலையில், 'ராயன்' படத்தின் 2வது பாடல் நாளை மாலை 6 மணிக்கு வெளியாகும் எனபுதியபோஸ்டரைவெளியிட்டுபடக்குழுஅறிவித்துள்ளது.

## விஜய் சேதுபதி நடித்துள்ள 'ஏஸ்' படத்தின் புகைப்படங்கள் இணையத்தில் வைரல்




விஜய் சேதுபதி நடிப்பில் உருவாகி இருக்கும் ஏஸ் திரைப்படத்தின்புகைப்படங்கள்இணையத்தில்வெளியாகி வைரலாகி வருகின்றன.


கடந்த2018ம்ஆண்டுவிஜய்சேதுபதிநடிப்பில்வெளியான திரைப்படம் ஒரு நல்ல நாள் பார்த்து சொல்றேன். இப்படத்தை ஆறுமுக குமார் இயக்கியிருந்தார். இத்திரைப்படம் பெரிய அளவில் வரவேற்பு பெறாத நிலையில், 5 ஆண்டுகள் கழித்து இந்த கூட்டணி மீண்டும் இணைந்துள்ளது.

இப்படத்தின் கதைக்களம் மலேசியா என்பதால், அண்மையில் இப்படத்தின் படப்பிடிப்பு மலேசியாவில் தொடங்கியது. மொத்த படப்பிடிப்பும் மலேசியாவில் விறுவிறுப்பாக நடைபெற்று முடிந்தது.

இத்திரைப்படத்தில் விஜய் சேதுபதி பல வித்தியாசமான கெட்டப்புகளில் நடித்துள்ளார். விஜய் சேதுபதியுடன் அனைத்து காட்சிகளிலும் பயணிக்கும் கதாபாத்திரத்தில் யோகி பாபு நடித்துள்ளார். ருக்மிணி, விஜய் சேதுபதிக்கு ஜோடியாக நடித்திருக்கிறார். மேலும் ஜஸ்டின் பிரபாகரன் படத்திற்கு இசை அமைத்திருக்கிறார்.

ஒருசிலகாரணங்களால், இப்படத்தின்ரிலீஸ்தேதிதள்ளிப்போனது. அண்மையில்இத்திரைப்படத்தின்டைட்டில் போஸ்டர் வெளியானது. படத்திற்கு ஏஸ் என்று டைட்டில் வைத்து டீசரையும் வெளியிட்டனர். இந்நிலையில், ஏஸ் திரைப்படத்தில் விஜய் சேதுபதி, ருக்மிணி, யோகி பாபு ஆகியோரின் புகைப்படங்கள் இணையத்தில் வெளியாகி வைரலாகி வருகின்றன.

## ரூ.358 கோடி மதிப்புள்ள வைரநகையுடன் பிரியங்கா சோப்ரா



ரோம்நகரில்நடைபெற்றநிகழ்ச்சியில்ரூ.358கோடிமதிப்புள்ளவைரநகையை அணிந்து அனைவரது கவனத்தையும் ஈர்த்துள்ளார்.

ரோமானிய பெரிய நகைக் கடையான பல்கேரியின் 140வது ஆண்டு விழா கொண்டாட்டம் நடைபெற்றது. இத்தாலியில் உள்ள இந்த நகைக்கடை வாட்சுகள், வாசனை திரவியங்கள், தோல் பொருட்கள் விற்பனையில் புகழ் பெற்றது.

இந்த விழாவில் பல்கேரிய நகைக் கடையின் உலகளாவிய தூதராக உள்ள பாலிவுட் பிரபலம் பிரியங்கா சோப்ரா கலந்து கொண்டார். இவர் ரூ. 358 கோடி மதிப்பிலான வைரநகை அணிந்து அசத்தியிருக்கிறார். இந்த நகையை 140 காரட் வைரங்களைக் கொண்டு சுமார் 2800 மணி நேரம் செலவழித்து வடிவமைத்து இருக்கிறார்கள். விழாவில் பிரியங்காவின் நகைதான் அனைவரது கண்களையும் பறித்திருக்கிறது.

இந்த நிகழ்வில் பிரியங்காவுடன் ஹாலிவுட் நடிகைகளும் கலந்து கொண்டு இந்த நிகழ்ச்சியை சிறப்பித்துள்ளனர்.

பாலிவுட் நடிகை பிரியங்கா சோப்ரா தனது காதலர் நிக் ஜோன்ஸ் உடனான திருமணத்திற்குப் பிறகு ஹாலிவுட்டிலும் படங்கள் நடித்து வருகிறார். 'மேட்ரிக்ஸ்4' படத்தை அடுத்து பிரியங்கா சோப்ரா 'ஹெட் ஆப் ஸ்டேட்ஸ்' என்ற ஹாலிவுட் படத்திலும் நடிக்க ஒப்பந்தமாகியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

## அபுதாபி அரசு சார்பில் நடிகர் ரஜினிகாந்துக்கு கோல்டன் விசா



ஜெயிலர் திரைப்படம் வெற்றிக்கு பிறகு ஞானவேல் இயக்கும் திரைப்படமான வேட்டையனில் நடிகர் ரஜினிகாந்த் நடித்து வந்தார். இந்த திரைப்படத்தின் படிப்பிடிப்பு கடந்த 13ந் தேதி நிறைவடைந்ததாக அறிவிக்கப்பட்டது. அதனை தொடர்ந்து ரஜினிகாந்த் ஓய்வுக்காக கடந்த 16ந் தேதி ஐக்கிய அரபு அமீரகத்தின் அபுதாபிக்கு சென்றார்

இந்த நிலையில் நேற்று அவருக்கு அபுதாபி அரசின் கலாசாரம் மற்றும் சுற்றுலாத்துறை சார்பில் அமீரகத்தில் 10 ஆண்டு வசிப்பதற்கான கோல்டன் விசா வழங்கப்பட்டது. அந்த துறையின் தலைமை அலுவலகத்தில் நடந்த நிகழ்ச்சியில் அதன் தலைவர் முகம்மது கலீபா அல் முபாரக் கோல்டன் விசாவுக்கான அமீரக அடையாள அட்டையை நடிகர் ரஜினிகாந்துக்கு வழங்கினார்.

இந்த நிகழ்ச்சியில் கோல்டன் விசாவுக்கான ஏற்பாடுகளை செய்த லூலூ குழுமத்தின் தலைவர் எம்.ஏ.யூசுப் அலி, அந்த நிறுவனத்தின் உயர் அதிகாரிகள் நந்தகுமார், பிஜூ கொட்டாரத்தில் மற்றும் ரெஜித் ராதாகிருஷ்ணன் உள்ளிட்டோர் உடன் இருந்தனர்.

கோல்டன் விசாவை பெற்றுக்கொண்ட நடிகர் ரஜினிகாந்த் கூறுகையில், ''அபுதாபி அரசிடம் இருந்து மதிப்புமிக்க அமீரகத்தின் கோல்டன் விசாவை பெறுவதில் நான் மிகவும் பெருமையடைகிறேன். இதனை வழங்கிய அபுதாபி அரசுக்கு எனது மனமார்ந்த நன்றிகள். மேலும் இந்த விசாவை எளிதாக கிடைப்பதற்கு ஆதரவளித்த லூலூ குழுமத்தின்தலைவரும்எனதுநல்லநண்பருமானஎம்.ஏயூசுப்அலிக்கும்எனதுநன்றியினைதெரிவித்துகொள்கிறேன்'' என்றார்.

இந்த நிகழ்ச்சியை நிறைவு செய்த பிறகு அமீரக சகிப்புத்தன்மை மற்றும் சகவாழ்வுத்துறை மந்திரி ஷேக் நஹ்யான் பின் முபாரக் அல் நஹ்யானை நடிகர் ரஜினிகாந்த் சந்தித்து பேசினார். அப்போது இருவரும் வாழ்த்துகளை பகிர்ந்துகொண்டனர்.

தொடர்ந்து அவர் அபுதாபியில் புதிதாக திறக்கப்பட்ட இந்து கோவிலுக்கு சென்று பார்வையிட்டார். அவர் சுவாமி தரிசனம் செய்து வழிபாடு நடத்தினார். பின்னர் நடிகர் ரஜினிகாந்த் அபுதாபி ஷேக் ஜாயித் பெரிய பள்ளிவாசலுக்கு சென்று பார்வையிட்டார்.

## சிறுவயதிலேயே கமல்ஹாசனால் ஈர்க்கப்பட்டேன் பிரபாஸ்



கமல்ஹாசனின் படைப்புகளால் சிறு வயதிலேயே ஈர்க்கப்பட்டேன். அவை என்னை மிகவும் பாதித்தது. எனது சினிமா ஆசையை மேலும் தூண்டியது என்று நடிகர் பிரபாஸ் 'கல்கி 2898 ஏ.டி' பட விழாவில் கூறினார்.

நாக் அஸ்வின் இயக்கத்தில் உருவாகி வரும் படம் கல்கி 2898 ஏடி. பிரபாஸ், கமல்ஹாசன், அமிதாப்பச்சன், தீபிகா படுகோனே, திஷா பதானி உள்பட பலர் படத்தில் நடித்துள்ளனர். ரூ.600 கோடி பட்ஜெட்டில் புராண காலத்தையும் நிகழ்காலத்தையும் இணைத்து அறிவியல் கலந்து இந்த படம் உருவாகி வருகிறது. வைஜெயந்தி மூவீஸ் படத்தை தயாரித்துள்ளது. சந்தோஷ் நாராயணன் இசையமைத்துள்ளார். ஜூன் 27ந்தேதி படத்தை திரைக்கு கொண்டுவரதிட்டமிடப்பட்டுள்ளது.படத்தில்பைரவாகதாபாத்திரத்தில்பிரபாஸ்நடித்துள்ளார்.அஸ்வத்தாமாவாக அமிதாப்பச்சன் நடித்துள்ளார். வில்லன் கதாபாத்திரத்தில் கமல்ஹாசன் நடித்திருப்பதாக தகவல்கள் வெளியாகி வருகிறது. படத்தில் புஜ்ஜி ரோபோ என்னும் கதாபாத்திரம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இந்த ரோபோவுக்கு கீர்த்தி சுரேஷ் குரல் கொடுத்துள்ளார். மேலும் படத்தில் நவீன தொழில்நுட்பத்துடன் புதிய கார் வடிவமைக்கப்பட்டுள்ளது. புஜ்ஜி கார் அறிமுக விழா ஐதராபாத் ராமோஜி பிலிம் சிட்டியில் நேற்று மாலை நடந்தது. பல்லாயிரக்கணக்கில் கூடியிருந்த ரசிகர்கள் மத்தியில் பிரபாஸ் அந்த காரை விழா மைதானத்தில் ஓட்டி வந்து அறிமுகப்படுத்தினார். இதைக் கண்டு ரசிகர்கள் ஆரவாரம் செய்து கொண்டாடி மகிழ்ந்தனர்.

விழாவில் பிரபாஸ் பேசியதாவது: படத்தில் நடித்த அனைவருக்கும் நன்றி. அமிதாப்பச்சன் மற்றும் கமல்ஹாசன் போன்ற ஜாம்பவான்களுடன் பணிபுரிந்தது மிகுந்த மகிழ்ச்சியாக உள்ளது. அவர்களின் உத்வேகம் ஊக்கம் அளிக்கிறது. அமிதாப்பச்சனின் பாரம்பரியம் மற்றும் கமல்ஹாசனின் சிறந்த நடிப்பு திறமை ஆகியவை சினிமாவில் எனது சினிமா கனவை வடிவமைத்தன. தீபிகா படுகோனே சர்வதேச அளவில் சிறந்த நடிகையாக உள்ளார்.

திஷா பதானி இளைஞர்களிடையே மிகவும் பிரபலமாக இருக்கிறார். திரைப்படத் தயாரிப்பாளர்களின் ஆர்வமும் அர்ப்பணிப்பும் பாராட்டுக்குரியது. கமல்ஹாசனின் படைப்புகளால் சிறு வயதிலேயே ஈர்க்கப்பட்டேன். அவை என்னை மிகவும் பாதித்தது. எனது சினிமா ஆசையை மேலும் தூண்டியது. இவ்வாறு அவர் பேசினார்.

## உலகக் கோப்பை கிரிக்கெட்: இந்தியா பாகிஸ்தான் போட்டிக்கான ஒரு டிக்கெட் விலை இவ்வளவா..?



9வது 20 ஓவர் உலகக்கோப்பை கிரிக்கெட் தொடர் அடுத்த மாதம் (ஜூன்) 1ந்தேதி முதல் 29ந்தேதி வரை வெஸ்ட் இண்டீஸ் மற்றும் அமெரிக்காவில் நடக்கிறது. இதில் உலகம் முழுவதும் கிரிக்கெட் ரசிகர்கள் ஆவலோடு எதிர்நோக்கும் இந்தியா பாகிஸ்தான் இடையிலான ஆட்டம் வருகிற 9ந்தேதி நியூயார்க்கில் நடக்கிறது.

இந்த ஆட்டத்திற்கான டிக்கெட்டுகள் ரூ.25 ஆயிரம் முதல் ரூ.8¼ லட்சம் வரையிலான விலையில் விற்கப்படுகிறது. குறைந்த விலை டிக்கெட்டுகள் ஏற்கனவே விற்றுதீர்ந்து விட்டது.

இந்த நிலையில் இந்தியா பாகிஸ்தான் ஆட்டத்தை பார்க்க டைமண்ட் கிளப் என்ற பெயரில் ஒரு டிக்கெட்டின் விலை ரூ.16½ லட்சமாக நிர்ணயிக்கப்பட்டு விற்கப்படுகிறது. 'ஒரு டிக்கெட் இவ்வளவு விலைக்கு ஐ.சி.சி. விற்பதை அறிந்து அதிர்ச்சி அடைந்தேன்.

உலகக் கோப்பை போட்டி அமெரிக்காவில் நடப்பது கிரிக்கெட்டை அங்கு பிரபலப்படுத்துவதற்கும், ரசிகர்களை மகிழ்விப்பதற்கு மட்டுமே தவிர டிக்கெட் விற்பனை மூலம் பணத்தை அள்ளுவதற்காக அல்ல' என்று ஐ.பி.எல். முன்னாள் தலைவர் லலித் மோடி கண்டனம் தெரிவித்துள்ளார்.

## ஜெனீவா ஓபன் டென்னிஸ்: கேஸ்பர் ரூட் காலிறுதிக்கு முன்னேற்றம்



பலமுன்னணிவீரர்கள்பங்கேற்றுள்ளஜெனீவாஓபன்டென்னிஸ் தொடர் ஜெனீவாவில் நடைபெற்று வருகிறது. இதில் ஆண்கள் ஒற்றையர் பிரிவின் 4வது சுற்று ஆட்டம் ஒன்றில் நார்வேயின் கேஸ்பர் ரூட், ஆஸ்திரியாவின் செபாஸ்டியனுடன் பலப்பரீட்சை நடத்தினார்.

பரபரப்பான இந்த ஆட்டத்தில் முதல் செட்டில் செபாஸ்டியன் வென்றார். தொடர்ந்துநடைபெற்றசெட்களில்ஆதிக்கம்செலுத்தி, சிறப்பாக விளையாடிய கேஸ்பர் ரூட் 46, 62, 62 என்ற செட்கணக்கில் வெற்றி பெற்று காலிறுதி சுற்றுக்கு தகுதி பெற்றுள்ளார்.

## டி20 உலக கோப்பை: தூதர் பட்டியலில் இணைந்த பாகிஸ்தான் முன்னாள் கேப்டன்



ஐ.சி.சி.யின் டி20 உலகக் கோப்பை கிரிக்கெட் தொடர் அடுத்த மாதம் தொடங்குகிறது. இந்த தொடருக்காக 15 பேர் அடங்கிய அணியை ஒவ்வொரு அணியும் அறிவித்து வருகின்றன.

இந்தியா, நியூசிலாந்து, இங்கிலாந்து, தென் ஆப்பிரிக்கா, ஆஸ்திரேலியா உள்ளிட்ட நாடுகள் தங்களது அணியை அறிவித்துவிட்டன.

இதற்கிடையே, டி20 உலகக் கோப்பை போட்டிக்கான தூதராக இந்தியாவின் யுவராஜ் சிங், வெஸ்ட் இண்டீசின் கிறிஸ் கெயில், ஜமைக்கா வீரர் உசைன் போல்ட் ஆகியோர் அறிவிக்கப்பட்டுள்ளனர். இந்நிலையில், டி20 உலகக் கோப்பைக்கான போட்டித் தூதராக பாகிஸ்தான் முன்னாள் கேப்டன் ஷாகித் அப்ரிடியை ஐ.சி.சி. அறிவித்துள்ளது.

## அடுத்த ஐபிஎல் சீசனிலும் தோனி விளையாடுவார்..
## காசி விஸ்வநாதன் நம்பிக்கை



இந்திய கிரிக்கெட் அணியின் வெற்றிகரமான கேப்டனாக விளங்கிய தோனி 2019ம் ஆண்டு சர்வதேச கிரிக்கெட்டில் இருந்து விடைபெற்றாலும், ஐ.பி.எல். போட்டியில் சென்னை சூப்பர் கிங்ஸ் அணிக்காக தொடர்ந்து விளையாடி வருகிறார். 42 வயதான அவர் நடப்பு சீசன் தொடங்கும் முன்பு சென்னை அணியின் கேப்டன் பதவியில் இருந்து ஒதுங்கினார். இறுதி கட்டத்தில்மட்டும்பேட்டிங்செய்யகளம்இறங்கிய தோனி அதிரடியாக சிக்சர்களை விளாசியதுடன் மொத்தம் 161 ரன்கள் எடுத்தார். அவரது ஸ்டிரைக் ரேட் 220.50 ஆகும். இருப்பினும் சென்னை அணி தனது கடைசி லீக் போட்டியில் பெங்களூரு அணியிடம் தோல்வியடைந்து பிளே ஆப் சுற்றுக்கு முன்னேற முடியாமல் வெளியேறியது.

இந்நிலையில்இந்தஐபிஎல்தொடர்தான்தோனியின்கடைசிதொடர்என்றுபலரும்சமூகவலைத்தளங்களில் பதிவிட்டுவந்தனர். ஆனால்இதுவரைதோனியிடம்இருந்துஎந்தஅதிகாரப்பூர்வதகவலும்வெளியாகவில்லை. தோனி சென்னை அணி நிர்வாகத்திடம் தொடர்ந்து போட்டியில் விளையாடுவதை பற்றி சில மாதங்களுக்கு பிறகு கூறுவதாக கூறியுள்ளார்.

இந்நிலையில், அடுத்த ஐபிஎல் சீசனில் எம்.எஸ்.தோனி விளையாடுவாரா என்ற கேள்விக்கு சென்னை அணி சிஇஓ காசி விஸ்வநாதன் பதில் அளித்துள்ளார். அவர் கூறியதாவது ,

எனக்கு அது தெரியாது. இதற்கான பதில் எம்.எஸ். தோனிக்கு மட்டும் தான் தெரியும். அவர் என்ன முடிவு எடுத்தாலும் அதற்கு நாங்கள் மரியாதை தருவோம். அவர் சம்பந்தமான முடிவுகளை எப்போதும் அவர் தான் எடுப்பார். சரியான சந்தர்ப்பங்களில் அந்த முடிவுகளை அவர் தெரிவிப்பார். ஆனால் அடுத்த ஐபிஎல் சீசனில் தோனி விளையாடுவார் என்று நாங்கள் நம்புகிறோம். இதுதான் என்னுடைய விருப்பமும் ரசிகர்களின் விருப்பமும் ஆகும். என்று தெரிவித்துள்ளார்.

## பாரா உலக தடகள சாம்பியன்ஷிப்: இந்திய வீரர் சச்சின் கிலாரி தங்கம் வென்றார்

உலக பாரா தடகள சாம்பியன்ஷிப் போட்டிகள் ஜப்பானின் கோபே நகரில் நடைபெற்று வருகின்றன. இதில் இன்று நடைபெற்ற ஆண்களுக்கான குண்டு எறிதல் (F46 பிரிவு) போட்டியில் இந்திய வீரர் சச்சின் சர்ஜிராவ் கிலாரி தங்கம் வென்று அசத்தினார். அவர் 16.30 மீட்டர் தூரத்திற்கு எறிந்தார். இது ஆசிய சாதனையாகும். இதற்கு முன்னதாக 16.21 மீட்டர் தூரம் வீசி ஆசிய சாதனையை இவர்தான் படைத்திருந்தார். இதன்மூலம் இந்தியா 11 பதக்கங்கள் பெற்றுள்ளது. இதில் ஐந்து தங்கப் பதக்கங்கள் அடங்கும்.




கடந்த முறை 3 தங்கம், 4 வெள்ளி, 3 வெண்கலம் வென்றிருந்தது. தற்போது இந்தியா அதைவிட அதிக பதக்கம் வென்றுள்ளது.



**மிகுதியான் மிக்கவை செய்தாரைத் தாந்தந்**
**தகுதியான் வென்று விடல்**

**விளக்கம்:**

**செருக்கினால் தீங்கானவற்றைச் செய்தவரைத் தாம் தம்முடைய பொறுமைப் பண்பினால் பொறுத்து வென்று விட வேண்டும்.**

நமது தினகனி
செய்திகள் மற்றும்
விளம்பரங்கள் தொடர்புக்கு:
94436 99066
Canara Bank Account : 120028528266
IFSC code : CNRB0001041

Printed by KANIRAJA V. published by KANIRAJA V. on behalf of NAMADHU DHINA KANI TAMIL DAILY and printed at SEAMAN GRAPHICS No. 7/253, KVN puram 2 2nd street, KilpaukGarden, Chennai 600010. and published at No.28, Thalikattipalayam, Kaithamalai Road, Uttukuli, Tiruppur - 63815.1. Editor: KANI RAJA V.